CC No.86/2015, நாள்: 13.08.2019.

அ.சா.5 —— மங்கா க/பெ. சென்னமூர்த்தி

முதல் விசாரணை வாக்குமூலம்

நான் பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மச்சினர். வழக்கின் எதிரிகள் வெளியூர்க்காரர்கள். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மதியம் 2 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது அ.சா.1ன் சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது அப்போது 2ம் எதிரியுடன் மற்ற நான்கு நபர்களுடம் சேர்ந்துகொண்டு அ.சா.1ஐ தேங்காய்பட்டையாலும், செங்கல்லாலும், செருப்பாலும் மற்ற இரண்டு நபர்கள் காலாலும் கையாலும் அ.சா.1ஐ தாக்கினார்கள். எதிரி கையால் காலால் உதைத்தார். சம்பவத்திற்கு முன்பே எதிரியும், ஆஜர் எதிரியும் அவருடன் சோந்து நான்கு நபர்களும் வந்தும் போய்க்கொண்டிருந்தார்கள். சம்பவத்தின்போது அ.சா.1 எனது உயிரை வாங்கிவிட்டார்கள் ஓடி வாருங்கள் என்ற சத்தம்கேட்டுதான் அங்கு சென்றோம். எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. எதிரிகள் சம்பவத்தின்போது அ.சா.1ஐ அடித்தார்கள் ஆஜர் எதிரியை தவிர மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அடிப்பட்ட அ.சா.1ஐ ஆம்புலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் இரண்டு அரை செங்கல்லை மற்றும் தென்னம்பட்டை ஆகியவற்றில் சம்பவத்தின்போது எதிரிகள் அ.சா.1ஐ அடிக்க பயன்படுத்தியதுதான். அந்த அரைசெங்கல்கள் **சா.பொ.1** வரிசை (2 எண்ணிக்கை). தென்னம்பட்டை **சா.பொ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை :இல்லை

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.

CC No.86/2015, நாள்: 13.08.2019.

அ.சா.6 ___ முனியம்மாள் க/பெ.கிருஷ்ணமூர்த்தி

முதல் விசாரணை வாக்குமூலம்

நான் பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரி ரவி மாடரஅள்ளி. ஆஜர் எதிரியின் அப்பாவும் என் கணவரும் சந்தைக்கு வியாபாரத்திற்காக மாடு வாங்கி விற்க செல்வார்கள். அந்த வகையில் ஆஜர் எதிரி பழக்கம். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எங்கள் ஊரைசேர்ந்த நபர்கள் நான் வேலைக்கு சென்றிருந்தபோது எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு என் கணவரை யாரோ அடித்து காயப்படுத்திவிட்டதாக தகவல் சொன்னதன்பேரில் நான் உடனடியாக எனது வீட்டு அருகே வந்துபார்த்தபோது என் கணவருக்கு இடுப்பிலும், தலையிலும் வலி இருப்பதாக கூறினார். ஆஜர் எதிரியும் எங்கள் ஊருக்கு வந்து என் கணவரை தாக்கியதாக சொன்னார். என் கணவரை 108 ஆமபுலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை ரவி என்றுதான் ஊரில் அழைப்பார்கள் அவருக்கு வேறு பெயர் இருப்பது பற்றி தெரியாது. (தற்சமயம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி வெங்கடேசன்)

குறுக்கு விசாரணை : இல்லை

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.

CC No.86/2015, நாள்: 13.08.2019.

அ.சா.7 —— அபிமன்னன் த/பெ.துரைசாமி

முதல் விசாரணை வாக்குமூலம்

நான் பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு மாமா முறையாகும். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1ன் வீட்டு அருகே என்னுடைய வீடு உள்ளது. கடந்த 2015ம் வருடம் ஒருநாள் மாலை சுமார் 4 மணியளவில் என்னுடைய வீட்டிற்கு வந்தபோது ஆஜர் எதிரியும், அவருடன் சேர்ந்த நான்கு நபர்களுடன் அ.சா.1ஐ அடித்துவிட்டதாக ஆஜர்எதிரியம் நான்கு நபர்களையும் பிடித்து வைத்திருந்தார்கள். மறுநாள் காலையில் 9 மணி சுமாருக்கு போலிசார் சண்டை நடந்த இடத்திற்கு வந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்து அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கினர்கள். என்னிடம் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆகும். பின்னர் சம்பவ இடத்திலிருந்த 2 அரை செங்கல்கள், தேங்காய் பட்டை ஆகியவற்றை போலிசார் என் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றினார்கள். சாட்சியாக என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையொப்பத்தை வாங்கினார்கள். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னுடன் எங்கள் ஊரைச்சேர்ந்த சின்னசாமி மகன் மாது என்பவரும் கையொப்பம் செய்தார்.

குறுக்கு விசாரணை :இல்லை

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.